பாதாள அஞ்சனம்

1. குப்பைமேனி வேர்
2. வெள்ளருக்கன் வேர்
3. வெள்ளை விஷ்ணு காந்தி வேர்
4. வெள்ளைச்சாரணை வேர்
5. வெள்ளைக்காக்ணம் வேர்

இவை ஐந்தையும் முறைப்படி காப்பு கட்டி சாபம் போக்கி ஆணிவேர் அறாமல் பிடுங்கி, உலர்த்தி முன்போல் தீயில் கறுக்கி எடுத்து வைத்துக்கொண்டு, ஒரு கோட்டானைப்பிடித்து உரோமம், குடல் போக்கி குழித்தைலம் எடுத்து, மேல்கண்ட மூலிகை வேரை கல்வத்திலிட்டு இரண்டு ஜாமம் கோட்டான் தைலம் விட்டு அரைக்க வேண்டும். அதன்பின் புனுகு, கோரோசனம், பச்சை கற்பூரம், குங்குமப்பூ, கஸ்தூரி இவைகளை வகைக்கு ஒரு குன்றிமணி சேர்த்து ஒரு ஜாமம் அரைத்தால், மை பக்குவம் அடையும். மை பக்குவம் ஆனதின் அடையாளம் தெரிய, கல்வத்தின் அடியில் ஒரு ரூபாய் நாணயத்தைப்போட்டு அரைத்தால், அது மையில் தெரியும்.

இதற்கு பூஜை மந்திரம்

ஓம் ஹ்ரீம் ஐம் மதன மேகலே மமகார்யம் ஸாதய ஸ்வாஹா.

இந்த மந்திரத்தை தினம் 1008 உருவு வீதம் பனிரெண்டு நாள் ஜெபம் செய்தால், மை உயிர் பெறும். அதன் பின்தான் உபயோகத்திற்கு ஆகும்.

நிவேதனம்

செவ்வலரி புஷ்பம், சந்தனம், பன்னீர், பால், பழம், தேங்காய், பத்தி, சூடம், தயிர், பொங்கல், ஆகியவைகளை வைத்து தூப தீபம் காட்டி வணங்கி மையை பத்திரம் செய்ய வேண்டும்.

இந்த மையின் பிரயோகம்

இந்த மையை கொஞ்சம் எடுத்து, வெற்றிலை ஒன்றில் தடவி விளக்கின் ஒளியில் பார்த்தால், பூமிக்குள் இருக்கும் பொருள்கள் யாவும் தெரியும். நவரத்தினம், தங்கம், வெள்ளி முதலிய உலோகங்கள் இருப்பதைக்காணலாம். தண்ணீர் ஊற்று, தண்ணீருக்குள் இருக்கும் பொருள் முதலியனவும் தெரியும். இது பாதாள அஞ்சனம் என பெயராதலால் வேறு உபயோகத்திற்கு ஆகாது

கண்கட்டு மை

ஒரு ஊர்க்குருவியைப் பிடித்து வந்து அதன் வாயில் கால் குன்றிமணி எடை சங்கு பாஷாணம், 10 குன்றிமணி எடை பாதரசம் இவை இரண்டையும் சேர்த்துப் போட்டு வாயையும் தைத்த பின்பு, ஒரு சிறிய பானையை எடுத்து அதில் ஒரு படி தென்னங்கள்ளை ஊற்றி, அதில் ஊர்க்குருவியைப்போட்டு மேலே ஒரு மூடியால் மூடி அடுப்பின் மேல் வைத்து, ஒரே மரத்தினாலான விறகினால் எரித்து நன்றாகச்சுண்டக் காய்ச்ச வேண்டும். கர்ய்ந்த பிறகு அதை ஒரு கல்வத்திலிட்டு ரோமம், அஸ்தி இவைகளை நீக்கிவிட்டு, பேய்க்கரும்புச்சாறு விட்டு மை போல அரைத்து, அந்த மையை வெள்ளைச் சலவை துணியில் தடவி காய வைத்துத் திரித்து, தலைச்சன் மண்டை ஓட்டில் ஜங்கோலத் தைலம் ஊற்றி, அதில் அந்த திரியை போட்டு விளக்கேற்றி, அதில் கிடைக்கும் மையை பார்ப்பனப்பிள்ளையின் மண்டை ஓட்டில் பிடித்து வழித்துச் செப்புச் சிமிழில் வைத்துக்கொண்டு, ஜாலக்காளைப் பூசித்து வணங்கி ஜாலம் செய்தால், பார்க்க வேடிக்கையாக இருக்கும்.

மையைக் கோலின் மேல் தடவினால் பாம்பாகும். மையைக் கையில் தடவிக்கொண்டு வேப்பிலையை உருவினால் தேளாகும், மண்ணில் தடவினால், கந்தகப் பொடியாகும். புளிய இலையை உருவினால் குளவிகளாகும். இறந்து போன பட்சிகளின் மேல் தடவினால், உயிருள்ளவைகள் தோற்றமளிக்கும்.

சர்வ தேவதா வசிய மை

பச்சை கற்பூரம், சாதிக்காய், கஸ்தூரி மஞ்சள், கோரோசனை, ஊசிக்காந்தம், இலவங்கம் இவைகளை வகைக்கு கால் வராகன் எடை வீதம் எடுத்து அத்துடன் மஞ்சளை தரமுள்ளதாகப்பார்த்து எடுத்து தேவையான அளவு சேர்த்துப் பொடித்துத் தூளாக்கி, வெள்ளையான சலவைத்துணியில் பரப்பி, அத்துடன் தலை மஞ்சங்கொடியை வைத்து, திரியாகத்திரித்து அதன்மேல் கறுப்புக் கம்பளி, தாமரை நூல், கள்ளி நூல், ஆகியவைகளை ஒன்றன் மேல் ஒன்றாகச்சுற்றி, தலைசன் பிள்ளையின் மண்டையோட்டில் காராவின் நெய்யூற்றி, அதில் திரியைப் போட்டு விளக்கேற்றி, மேலே மண்டையோட்டை மூடி மை செய்து, அத்துடன் சவ்வாது, புனுகு இவைகளைச் சம எடையாகச் சேர்த்து வாலையையும் ,மோகினியையும் ஸ்ரீம் இரிம், கிலீம் மோகினி தேவினீ ஆக்ருஷ்ணீ அங்றங் என்று ஒரு லட்சத்து எட்டு உரு கொடுத்து, அந்த மையை தங்கம் அல்லது வெள்ளியால் செய்த கம்பியைக்கொண்டு எடுத்து திலர்தமிட, தேவர்களும், மானிடர்களும் வசியமாவார்கள் என்று முனிவர்கள் மொழிந்துள்ளனர்.

வசிய மை

1.வெள்ளைருக்கன் வேர்

2.வெள்ளை விஷ்ணு காந்தி வேர்

3.வெள்ளைக்காக்ணம் வேர்

4.இந்திர கோபம் 50

இவைகளை நன்கு உலர்த்தி, தீயில் கறுக்கி வைத்துக் கொள்ள வேண்டும். அதன்பின் ஓரளிஞ்சி விதை ஒரு படி கொண்டு வந்து குழித்தைலம் எடுத்து, மேற்கண்ட வேரைக் கல்வத்திலிட்டு தைலம் விட்டு இரண்டு ஜாமம் அரைத்து பின் புனுகு, கோரோசனம், பச்சை கற்பூரம், குங்குமப்பூ, கஸ்தூரி இவைகளை வகைக்கு ஒரு குன்றிமணி சேர்த்து ஒரு ஜாமம் அரைத்தால், மை பதமாகும். இதை கொம்பு சிமிழ் செய்து அதில் பத்திரம் செய்யவும்.

இதற்கு பூஜை மந்திரம்

ஓம் நமோ பஹவதே மனோமயே ஹ்ரீம் க்லீம் சகல ஸ்தாவர ஜங்கமம் மமவஸம் ஆகர்ஸய ஆகர்ஸய ஹ்ரீம் ஸ்வாஹா

இந்த மந்திரத்தை தினம் 1008 உருவு வீதம் 21 நாட்கள் ஜெபம் செய்தால், மை உயிர் பெறும். அதன் பிறகு தான் இது பிரயோஜனம் ஆகும்.

இதை கொஞ்சம் எடுத்து, நெற்றியில் திலகமிட்டுச் சென்றால் எல்லாவித வியாபாரமும் பெருகும்; வசியம் ஆகும். நம்மைக் காண்பவர் நல்ல கௌரவம் தந்து மதிப்பு தருவார். பிறருக்கும் செய்து தரலாம். நெற்றியில் அணிந்து சென்றவர் யாராயினும் மக்களின் மதிப்பைப் பெற்று பெறுவாழ்வு பெறுவது உறுதி.

சத்துரு வசிய மை

1. வெள்ளைருக்கன் வேர், 2. வெள்ளை விஷ்ணு காந்தி வேர்

3. வெள்ளைக்காக்ணம் வேர், 4. வெண்குன்றி வேர், 5. ஆனைவணங்கி வேர்

இவைகளை முறைப்படி காப்பு கட்டி, சாபம் போக்கி ஆணிவேர் அறாமல் வெட்டி எடுத்து, தீயில் கறுக்கி எடுத்துக்கொண்டு பச்சைக் கற்பூரம், கோரோசனம், புனுகு, குங்குமப்பூ, கஸ்தூரி இவைகளை வகைக்கு ஒரு குன்றிமணி எடை வீதம் மேல்கண்ட வேருடன் சேர்த்து கல்வத்திலிட்டு, காராம்பசு நெய் விட்டு இரண்டு ஜாமம் அரைத்து, கொம்பு சிமிழில் பத்திரம் செய்யவும்.

இதற்கு பூஜை மந்திரம்

ஓம் க்லீம் ஸௌம் ஸ்ரீம் நமோ பஹவதி ராஜா மோகினி க்லீம் க்லீம் சகல ஸ்தாவர ஜங்கமம் மமவஸம் ஆகர்ஸய ஆகர்ஸய ஸ்வாஹா

இந்த மந்திரத்தை பத்தொன்பது தினம்ஜெபம் செய்ய வேண்டும் 1008 உருவு வீதம் ஜெபம் செய்தால், மை உயிர் பெறும். அதன் பிறகு தான் இது பிரயோஜனம் ஆகும்.

இதை கொஞ்சம் எடுத்து, நெற்றியில் அணிந்து சென்றால், பகையாளி கிடையாது. எதிரி நம்மை காணும் போது வணங்கி மரியாதை செய்வான். இந்த சத்ரு வசியம் என்பது சத்ரு இல்லாமல் எல்லா நன்மையும் அடையாலம். பெண்களுக்கும் இது ஆகும். சத்துருவான பேர் யாராயினும் நமக்கு நண்பராவது உறுதி.

இராஜ வசிய மை

1. வெள்ளெருக்கன் வேர்
2. கருங்குன்றி வேர் .
3. வெள்ளைக்காக்கணம் வேர்
4. வெண்குன்றி வேர்
5. வாகை வேர்
6. செங்கொடி வேலி வேர்
7. செந்நாயுருவி வேர்
8. சிறுபுன்னை வேர்
9. மருதோன்றி வேர்

இவைகளை முறைப்படி காப்பு கட்டி, சாபம் நிவர்த்தி செய்து ஆணிவேர் அறாமல் வெட்டி எடுத்து, தீயில் கறுக்கி எடுத்து வைத்துக்கொண்டு வல்லூறு பறவை ஒன்றைப்பிடித்து குடல் போக்கி குழித்தைலம் எடுத்து, மேற்கண்ட வேரை கல்வத்திலிட்டு, தைலம் விட்டு இரண்டு ஜாமம் அரைத்து பின் பச்சைக் கற்பூரம், கோரோசனம், புனுகு, குங்குமப்பூ, கஸ்தூரி இவைகளை வகைக்கு ஒரு குன்றிமணி எடை சேர்த்து விட்டு ஒரு ஜாமம் அரைத்து மையை எடுத்து, கொம்பு சிமிழில் பத்திரம் செய்யவும்.

இதற்கு பூஜை மந்திரம்

ஓம் நமோ பஹவதி ராஜ வசிய ராஜ காருணி காருண்ய கடாஷ விஷ்ணு சொரூபி மாயா மூர்த்தி க்லீம் ஜேம் ஓம் துர்க்கி மமவசம் குரு குரு ஸ்வாஹா.

இந்த மந்திரத்தை தினம் 1008 உருவு வீதம் ஏழு தினம் ஜெபம் செய்ய வேண்டும்,இப்படி செய்த பின் மை உயிர் பெறும். வேண்டும் போது இதை கொஞ்சம் எடுத்து, நெற்றியில் திலகம் இட்டு சென்றால் ராஜ வசியம் அகும். கோடிஸ்வரர், தனவந்தர், பெரிய அதிகாரிகள் நம்மை காணும் போது மரியாதை தருவார்கள்.

மிருக வசிய மை

1. சிறிய நங்கை வேர்
2. கீழ்க்காய் நெல்லி வேர்
3. சுடுதுறத்தி வேர்
4. சுண்டை வேர்
5. பொன்னாங்காணி வேர்
6. மருதோன்றி வேர்
7. பேயத்தி வேர்
8. வேளை வேர்

இவைகளை முறைப்படி காப்பு கட்டி, சாபம் நிவர்த்தி செய்து, ஆணிவேர் அறாமல் தோண்டி எடுத்து,உலர்த்தி தீயில் கறுக்கி எடுத்துக்கொள்ளவும்.

ஒரு கல்வத்தில் போட்டு அழிஞ்சி விரை தைலம் விட்டு இரண்டு ஜாமம்அரைத்தபின் பச்சைக் கற்பூரம், கோரோசனம், புனுகு, குங்குமப்பூ, கஸ்தூரி இவைகளை வகைக்கு ஒரு குன்றிமணி எடை வீதம் சேர்த்து அரைத்து, கொம்பு டப்பியில் வைத்து பத்திரம் செய்யவும்.

இதற்கு பூஜை மந்திரம்

ஓம் ஹ்ரீம் நமோ பஹவதி காளி கால சங்காரினி மாயா ரூபினி சகல ஸ்தாவர ஜங்கமம் மமவஸம் குரு குரு ஸ்வாஹா

இந்த மந்திரத்தை 11 நாட்கள் தினமும் 1008 உருவு வீதம் ஜெபம் செய்ய வேண்டும்

நிவேதனம்

பால், பழம், கற்கண்டு, தேங்காய், பத்தி,சூடம், இவைகளை வைத்து தூப தீபம் காட்டி ஜெபம் செய்ய,மை உயிர் பெறும். இதை வேண்டும் போது கொஞ்சம் எடுத்து, நெற்றியில் திலகம் இட்டு சென்றால், . காட்டு மிருகங்கள் எல்லாம் நம்மை கண்டு பயந்து, நம் சொல்படி நடக்கும்; நம்மை ஒன்றும் செய்யாது. இது மிருக வசியம் எனப்பெயர்.

உச்சாடன மை

1. சிறிய நங்கை வேர்
2. கீழ்க்காய் நெல்லி வேர்
3. நீர் மேல் நெருப்பு வேர்
4. கொழிஞ்சி வேர்
5. கட்டுக்கொடி வேர்
6. காட்டு மல்லிகை வேர்
7. பேய் துளசி வேர்
8. தும்பை வேர்

இவைகளை முறைப்படி காப்பு கட்டி, சாபம் நிவர்த்தி செய்து, ஆணிவேர் அறாமல் தோண்டி எடுத்து,உலர்த்தி தீயில் கறுக்கி எடுத்துக்கொண்டு, கருங்குரங்கு ஒன்றை பிடித்து குடல் போக்கிகுழித்தைலம் எடுத்து மேற்கண்ட வேர்களைக் கல்வத்திலிட்டு இத்தைலம் விட்டு இரண்டு ஜாமம் அரைத்து பச்சைக் கற்பூரம், கோரோசனம், புனுகு, குங்குமப்பூ, கஸ்தூரி இவைகளை வகைக்கு ஒரு குன்றிமணி எடை வீதம் சேர்த்து அரைத்து, கொம்பு சிமிழில் பத்திரம் செய்யவும்.

இதற்கு பூஜை மந்திரம்

ஓம் நமோ பஹவதி நீலி காபாலி பஞ்சாஷரி ஆனந்த ரூபி ஹ்ரீம் க்லீம் டம்டம் உச்சாடய உச்சாடய ஸ்வாஹா

இந்த மந்திரத்தை தினம் 1008 உருவு வீதம் 7 நாட்கள் ஜெபம் செய்ய வேண்டும்

நிவேதனம்

பால், பழம், கற்கண்டு, பொங்கல், தேன், இவைகளை வைத்து பூஜை செய்ய வேண்டும். மை உயிர் பெறும். பேய் பூதம், வேதாளம் இவைகள் உச்சாடனம் ஆகும்

வசிய மை

வெள்ளருக்கன் இலையைச்சாப நிவர்த்தி செய்து அதில் ஒரு பிடி அளவு எடுத்து, அத்துடன் பொற்றலை கையான் ஒரு பிடி எடுத்து இவைகள் இரண்டையும் சாறு பிழிந்து எடுத்து, ஒரு விராகன் எடை அஞ்சனக்கல் சேர்த்து அரைத்துச்சட்டியில் பூசி, கற்பூரங் கொளுத்திப் புகைப் பிடித்து வழித்து எடுத்துக்கொண்டு, அதில் கோரோசனம் குங்குமம், கஸ்தூரி, இவைகளை வகைக்கு ஒரு விராகன் எடை எடுத்து அத்துடன் சேர்த்து புத்துத்தேனாவட்டித் திலகமிட்டால், வசியமாகும்.

நகரும் சொத்துக்களை மறைக்கும் மை (வேறு வீதம்)

ஐங்கோலம் பிண்டத்தைக் காய வைத்து தூளாக்கி, பெண்ணின் சீலையில் வைத்துத்திரித்து, அந்த திரியை ஒரு தலை மண்டை ஓட்டில் போட்டு, பசுவின் நெய் ஊற்றி எரிக்க வேண்டும். எரித்து மை செய்து அந்த மையை ஒரு செப்பு சிமிழில் அடைத்து வைத்துக் கொண்டு நெற்றியில் திலகமிட்டால், உலகத்தில் உள்ள பொருட்கள் யாவும் திலகமிட்டவர்க்கு தெரியும். மற்றவர்க்கு மறையும்.

சர்வ வசிய மை

பொன்னாவாரை வேரை நைத்து நிழலில் உலர்த்தி குழித்தைலம் இறக்கிக் கல்வத்திலிட்டு அத்துடன் மரக்கொடி, பூரம், கோழி முட்டை, வெண்கரு, புனுகு, கோரோசனை இவைகளைச் சம எடையாகச்சேர்த்து மை போல அரைத்து ஒரு சிமிழியில் அடைத்து வைத்துக் கொள்ளவும், தேவையான போது நெற்றியில் கொஞ்சம் எடுத்து திலகமிட்டுக் கொண்டு சென்றால், கண்டவர்கள் அனைவரும் வசியமாவார்கள்.

ஆக்ரூஷ்ணம்

1. சிறிய நங்கை வேர்
2. தொட்டால் சுருங்கி வேர்
3. நாகமல்லி வேர்
4. கொழிஞ்சி வேர்
5. தலைச்சுருளி வேர்
6. சிறுமுன்னை வேர்
7. சந்தன வேர்
8. சுகறை வேர்

இவைகளை முறைப்படி காப்பு கட்டி, சாபம் நிவர்த்தி செய்து, ஆணிவேர் அறாமல் வெட்டி எடுத்து,உலர்த்தி தீயில் கறுக்கிக்கொண்டு, பச்சை தவளை கொண்டு வந்து குடலை நீக்கி குழித்தைலம் எடுத்து கொள்ளவும்.பின் பச்சைக் கற்பூரம், கோரோசனம், புனுகு, குங்குமப்பூ, கஸ்தூரி இவைகளை வகைக்கு ஒரு குன்றிமணி எடை சேர்த்துக் கல்வத்திலிட்டு,பச்சை தவளை நெய் விட்டு, இரண்டு ஜாமம் அரைத்து, கொம்பு சிமிழில் பதனம் செய்யவும்.

இதற்கு பூஜை மந்திரம்

ஓம் நமோ பஹவதி ஸர்வ ஆதார சக்தி க்லீம் க்ரீம் ஹ்ரீம் ஸ்ரீம் ஓம் ஆக்ருஷ்ண தூளி சர்வம் ஆக்ரூஷ்ய ஆக்ரூஷ்ய ஹூம் க்லீம் பட் ஸ்வாஹா

இந்த மந்திரத்தை தினம் 1008 உருவு வீதம் 21 நாட்கள் ஜெபம் செய்ய வேண்டும்; மை உயிர் பெறும்.

இதை கொண்டு எல்லாவிதமான ஆக்ருஷ்ணம் செய்யலாம்.ஆக்ருஷ்ணம் என்பது அழைப்பு.

பெண் ஆக்ரூஷ்ணம்

பச்சை தவளை இரண்டு, ஆண், பெண் ஜோடியாக ஒன்றின் மேல் ஒன்று புணர்ந்து தண்ணீரில் மிதக்கும். அந்த சமயத்தில் அதை அப்படியே பிடித்து ஆண் வேறு பெண் வேறாக குழித்தைலம் இறக்கி, இரண்டு பாட்டில்களில் நிரப்பி, ஆண், பெண் என்று சீட்டு எழுதி அதில் ஒட்டி பத்திரம் செய்யவும்.

1. பேய் மிரட்டி வேர், 2. தொட்டால் வாடி வேர், 3. நில வாகை வேர், 4. கொழிஞ்சி வேர், 5. ஆடையொட்டி வேர், 6. சிறுசின்னி வேர், 7. புல்லாமணக்கு வேர், 8. பின்துடரி வேர், 9. தலை சுருளி வேர்

இவைகளை முறைப்படி காப்பு கட்டி, சாபம் நிவர்த்தி செய்து, ஆணிவேர் அறாமல் பிடுங்கி, உலர்த்தி தீயில் கறுக்கி வைத்துக்கொண்டு, பச்சைக் கற்பூரம், கோரோசனம், புனுகு, குங்குமப்பூ, கஸ்தூரி இவைகளை வகைக்கு ஒரு குன்றிமணி எடை சேர்த்துக் கல்வத்திலிட்டு,பச்சை தவளை நெய்யினால் இரண்டு ஜாமம் அரைத்து, கொம்பு சிமிழில் பத்திரம் செய்யவும்.

இந்த மையை அரைக்கும் போது இரண்டு பாகம் செய்து ஆண் தைலம் வேறு, பெண் தைலம் வேறாக விட்டு அரைத்து தனித்தனியாக ஆண் பெண் என்று சீட்டு எழுதி டப்பியில் ஒட்டி வைக்க வேண்டும். இதில் பெண் தைல மையை ஒரு பெட்டியில் வைத்து விட்டு, ஆண் தைல மையை எடுத்துப்பிரயோகம் செய்ய வேண்டும்.

இந்த இரண்டு மையையும் வைத்து ஆக்ருஷ்ணமந்திரத்தை தினம் 1008 உருவு வீதம் 21 நாட்கள் ஜெபம் செய்ய வேண்டும்; மை உயிர் பெறும்.

நிவேதனம்

பால், பழம், கற்கண்டு, தேங்காய், சுண்டல், பாயாசம், சூடம், பத்தி இவைகளை வைத்து தூப தீபம் காட்டி வணங்கி ஜெபம் செய்ய வேண்டும்.

இந்த முறைப்படி பூஜை செய்த மையை ஒரு பெட்டியில் பெண் மையை வைத்து விட்டு, ஆண் மையை எடுத்து எந்த பொருள் மீது தடவினாலும், அந்த பொருள் பெண் மை இருக்கும் இடத்திற்கு வந்து சேரும். கொஞ்சம் வீபூதியில் கலந்து பெண்களின் மீது தூவினால் சற்று நேரத்தில் புத்தி கலங்கி, பெண் மை இருக்கும் இடத்தை நாடி வந்து சேர்வர். இரண்டரை மணி நேரம் இந்த மையின் வேகம் இருக்கும். அதன் பின் அது குறைந்து விடும். அந்தந்த பொருள் அந்தந்த இடம் சென்று விடும். பலவித ஜால வித்தை செய்து காட்டலாம். தீமையான செயல் எதுவும் செய்யலாகாது. கற்பழித்தல், பிறர் பொருள் கவர்தல், கொலை செய்தல் இவ்வித பஞ்சமா பாதகம் செய்தால் பெரும் நரகம் எய்தும்.

தன ஆக்ரூஷ்ணம்

1. பொன் ஊமத்தன் வேர், 2. பொன்னாவாரை வேர், 3. சிறுமுன்னை வேர்
4. சிறிய நங்கை வேர், 5. தலைச்சுருளி வேர், 6. பொன்னாங்கண்ணி வேர்
7. சிறுசின்னி வேர்.

இவைகளை முறைப்படி காப்பு கட்டி, சாபம் நிவர்த்தி செய்து, ஆணிவேர் அறாமல் தோண்டி எடுத்து,உலர்த்தி தீயில் கறுக்கி பத்திரம் செய்யவும்.
பச்சைக் கற்பூரம், கோரோசனம், புனுகு, குங்குமப்பூ, கஸ்தூரி இவைகளை வகைக்கு ஒரு குன்றிமணி எடை சேர்த்துக் கல்வத்திலிட்டு,பச்சை தவளை நெய் இரண்டையும் சேர்த்து, இரண்டு ஜாமம் அரைத்து எடுத்து, கொம்புச் சிமிழில் பத்திரப்படுத்தவும்.

இதற்கு பூஜை மந்திரம்

ஓம் ஹ்ரீம் க்லீம் ஸௌம் ஸர்வ ஆக்ருஷ்ண காளி ஓங்கார சக்தி உத்தண்ட வீரி ஆக்ரூஷ்ய ஆக்ரூஷ்ய க்லீம் ஹ்ரீம் ஹூம் பட் ஸ்வாஹ.

இந்த மந்திரத்தை தினம் 1008 உருவு வீதம் 12 நாட்கள் ஜெபம் செய்ய, சித்தியாகும்.

நிவேதனம்

பால், பழம், கற்கண்டு, தேங்காய், சுண்டல், சூடம், பத்தி முதலியவைகளை வைத்து தீப தூபம் காட்டி பூஜை செய்து வணங்கினால் மை உயிர் பெறும். இதனால் கத்தை கத்தையாகக் காகிதம் ரூபாய் நோட்டு அளவில் வெட்டி எடுத்து அதில் இந்த மையை கொஞ்சம் தடவினால், அவை எல்லாம் நூறு ரூபாய் நோட்டாக மாறும். இதை செலவு செய்ய முடியாது; வேடிக்கை காட்டலாம்

தேவ ஆக்ருஷ்ணம்

1. வெள்ளைருக்கன் வேர், 2. வெள்ளை விஷ்ணு காந்தி வேர்,
3. பொன் முசுட்டை வேர், 4. வெண்குன்றி வேர், 5. ஆனைவணங்கி வேர்
6. பொன் முசுட்டை வேர். 7. பொர்க்கையான் வேர்

இவைகளின் வேரை முறைப்படி காப்பு கட்டி, சாபம் போக்கி, ஆணிவேர் அறாமல் தோண்டி எடுத்து,உலர்த்தி தீயில் கறுக்கி வைத்துக் கொண்டு ஒன்பது மாத தலை பிண்டத்தின் குடலை போக்கி குழித்தைலம் இறக்கி வைத்துக்கொண்டு
பச்சைக் கற்பூரம், கோரோசனம், புனுகு, குங்குமப்பூ, கஸ்தூரி இவைகளை வகைக்கு ஒரு குன்றிமணி எடை சேர்த்துக் கல்வத்திலிட்டு, தலை பிண்டதைலம் விட்டு, இரண்டு ஜாமம் அரைத்து எடுத்து கொம்புச்சிமிழில் பத்திரப்படுத்தவும். நாம் எந்த தேவதையை உபாசனம் செய்தாலும், அதன் ஆக்ஷரத்தில் இந்த மையை கொஞ்சம் வைத்து ஜெபம் செய்தால், சீக்கிரம் சித்தி ஆகும். ஆகர்ஸணம் என்றால் அழைப்பது என்று பொருள். அதனால் இது தேவதை ஆகர்ஸணம்

இதனால் எல்லா தேவதைகளும் வரவழைத்துச் சித்தி பெறலாம். அதற்கு முன் மையை பூஜையில் வைத்து ஆகர்ஸண மந்திரத்தை தினம் 1008 உருவு வீதம் 21 நாட்கள் ஜெபம் செய்த பின் தான் மையை உபயோகம் செய்ய வேண்டும். ஆகர்ஸண மந்திரம், பெண்கள் ஆகர்ஸணத்திற்கு ஜெபத்ததையே இதற்கும் ஜெபிக்கவும்.

ஆண்வசியம்

1. செம்முள்ளி
2. சிவந்த கஞ்சா
3. பொன்னாங்கண்ணி
4. செகப்பு வேனை

இவைகளின் சாற்றில் வகைக்கு ஒரு விராகன் எடை வீதம் எடுத்து, எல்லாவற்றையும் ஒரு கல்வத்திலிட்டு அத்துடன் கோரோசனை, புனுகு இவைகளை வகைக்கு ஒரு விராகன் எடை வீதம் எடுத்து எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து, பசுவின் நெய், சிற்றுண்டக்கரு, கொம்புத்தேன் இவைகளைத்தேடி தேவையான அளவு சமமாக விட்டு, மை போல அரைத்து ஒரு சிமிழியில் அடைத்து வைத்துக் கொள்ளவும்.

கணபதியைப் பூஜை செய்து, பிறகு வாலையைப் போற்றி பணிந்து, அந்தமையை ஸ்திரீகள் நெற்றியில் திலகமிட்டுக் கொண்டு சென்றால், அதைக் கண்ணுறும் ஆடவர்கள் அனைவரும் வசியமாவார்கள்.

பெண் ஈடு

1. மின்மினிப்பூச்சி 10
2. தொட்டால் வாடி(வகைக்கு 1 வராகன் எடை)
3. ஆடையொட்டி
4. இந்திர கோப பூச்சி 10
5. புல்லாமணக்கு
6. பின்துடரி
7. தலை சுருளி
8. ஈப்புலி 5
9. குழியானை பூச்சி 5

இவைகளை கறுக்கி கல்வத்திலிட்டு பேய்க்கரும்பு சாறு விட்டு, நான்கு ஜாமம் அரைத்து குன்றிமணி பிரமாணம் மாத்திரை செய்து, உலர்த்தி ஒரு சீசாவில் பத்திரம் செய்யவும். இந்த மாத்திரையில், தனது உடலில் இருந்து கொஞ்சம் இரத்தம் எடுத்து சேர்த்து திண்பண்டங்களில் வைத்து சாப்பிட கொடுத்தால், உயிர் உள்ளளவும் பிரிவினை இல்லை.

ஆண் ஈடு

1. மின்மினிப்பூச்சி 7
2. தொட்டால் வாடி
3. சுழல் வண்டு 10
4. இந்திர கோப பூச்சி 15
5. கோரோசனம்
6. மருள் ஊமத்தன் விரை
7. தாமரை விரை
8. கோவை விரை
9. குழியானை 20
10. தலை சுருளி

(வகைக்கு 1 வராகன் எடை)

இவைகளை கல்வத்திலிட்டு பேய் பீர்க்கன் சாறு விட்டு, நான்கு ஜாமம் அரைத்து குன்றிமணி பிரமாணம் மாத்திரை செய்து, உலர்த்தி பத்திரம் செய்யவும். இதை வேண்டும் போது ஒரு மாத்திரை எடுத்து வீட்டுக்கு விலக்கம் ஆன உதிரம் கொஞ்சம் கூட்டி, திண்பண்டங்களில் கொடுத்தால், அள்றைய தினத்தில் இருந்தே அடிமை ஆவான்.

கீழா நெல்லி மை

கீழா நெல்லி வேரை கொண்டு வந்து ஒரு புது சட்டியில் போட்டுக் கறுக்கிப் பொடியாக்கி, அதைத் தேங்காய் எண்ணெய் விட்டு அரைத்து ஒரு வெள்ளைத் துணியில் தடவி காய வைத்து, ஒரு அகல் எடுத்து வந்து அதில் அந்தத் துணியை திரித்து போட்டுக்கொளுத்தி, ஆலாக்குருவியின் கருவை எடுத்து வந்து புது சட்டிக்குத் தடவி காய வைத்து, அதில் புகை பிடித்து மையாக்கிக் கொண்டு அதை ஒரு சிமிழியில் அடைத்து வைத்துக்கொள்ளவும். ஆஞ்சனேயரையும், அஞ்சனா தேவியையும் பூஜை செய்து, அந்த மையை ஒரு வெற்றிலையில் தடவி பார்க்க, சகலமும் தெரியும்.

வசிய அஞ்சனம்

1. கருங்குருவி
2. கரும்பூனை
3. கருங்கோழி
4. கருநாய்
5. கருங்காக்கை
6. மீன் கொத்தி
7. செம்போத்து

இவைகளின் கண்ணும், பிச்சும் எடுத்து உலர்த்தி கல்வத்திலிட்டு, ஓரிளிஞ்சி தைலம் விட்டு இரண்டு ஜாமம் அரைத்து கோரோசனம்,பச்சைக் கற்பூரம், கோரோசனம், புனுகு, குங்குமப்பூ, கஸ்தூரிஇவைகளை வகைக்கு ஒருகுன்றிமணி சேர்த்து அரைத்துக்கொம்புச் சிமிழியில் பத்திரப்படுத்தவும்.

இதை வேண்டும்போது கொஞ்சம் எடுத்து நெற்றியில் திலகமிட்டுச் செல்ல, சகல வசியமும் ஆகும். இதை அஞ்சனமாக பார்க்கலாம். ஒரு வெற்றிலையில் கொஞ்சம் தடவி விளக்கின் ஒளியில் பார்த்தால் சகலமும் தெரியும்.
மூன்று காலத்தில் நடப்பவைகள் எல்லாம் தெரிந்து சொல்லலாம். பூமிக்குள்ளும், தண்ணீருக்குள்ளும் இருக்கும் எல்லாவித பொருள்களையும் கண்டு கொள்ளலாம். வெகு தூரத்தில் இருக்கும் பொருள்கள் முதலியவற்றைக் கண்டுக் கொள்ளலாம்.

இதற்கு பூஜை மந்திரம்

ஓம் அனுமந்தாய ஸ்ரீ ராம தூதா அனுமந்தா வருக வருக ஸ்வாஹ.

நிவேதனம் : பால், பழம் பூஜை செய்யவும்.

மறைவு மை

1. பச்சை ஓந்தி பிச்சுக் கண்
2. கருங்குருவி பிச்சுக் கண்
3. தேவாங்கு பிச்சுக் கண்
4. செம்போத்து பிச்சுக் கண்
5. கரும்பூனை பிச்சுக் கண்
6. கருங்காக்கை பிச்சுக் கண்

இவைகளைப் பச்சையாக அரைத்து குழித்தைலம் எடுத்து, இத்தைலத்தை ஆமை ஓட்டில் விட்டு, மேற்கண்ட திரியை போட்டு தைலம் விட்டு விளக்கு ஏற்றி, மேற்கண்ட திரியை போட்டு தைலம் விட்டு விளக்கு ஏற்றி, மேல் மண்டை ஓட்டை வைத்து மூடிவிட்டால் மை பற்றும். இந்த தைலம் முடியும் வரை எரித்து மையை எடுத்துக்கொண்டு புனுகு, கஸ்தூரி, கற்பூரம், கோரோசனம், குங்குமப்பூ, இவைகளை வகைக்கு ஒரு குன்றிமணி வீதம் சேர்த்து மை போல் அரைத்து கொம்புச்சிமிழில் பத்திரப்படுத்தவும்.

இந்த மையை கொஞ்சமாக எடுத்து நெற்றியில் திலகமிட்டுக் கொண்டால், நமது உருவம் யார் கண்ணுக்கும் தெரியாது. எங்கு வேண்டுமானாலும் போகலாம். நம்மைக் காண தேவர்களாலும் முடியாது. இதை வைத்துக்கொண்டு திருடு, கற்பழித்தல் இவ்வித சமூக விரோதமான செயல் எதுவும் செய்யாலாகாது. ஜால வித்தைக்கு மட்டும் பயன்படுத்த வேண்டும்

மதிமயக்கிப் பொடி

1. பச்சை குண்டுமணி
2. கருப்பு குண்டுமணி
3. வெள்ளை நீர்முள்ளி
4. வெள்ளெருக்கு
5. வெண் கொழிஞ்சி
6. வெள்ளைச் சாரணை
7. வெள்ளை குண்டுமணி
8. வெள்ளை கண்டங்கத்தரி
9. வெள்ளை விஷ்ணு காந்தி
10. வெண்புரசு

இவைகளின் வேர் வகைக்கு அரை பலம் உலர்த்தி எடுத்து சூரணத்துடன் செய்து வைத்துக் கொண்டு, திகைப்பூண்டு பூச்சி 10 எடுத்து தீயில் கறுக்கி எடுத்து, மேற்கண்ட மூலிகை சூரணத்துடன் சேர்த்து, பச்சை கற்பூரம், புனுகு, குங்குமப்பூ, கஸ்தூரி, கோரோசனம் இவைகளை வகைக்கு ஒரு வராகன் எடை எடுத்து, மேற்கண்ட சூரணத்தில் சேர்த்து, பேய் சுரைக்காய் குடுக்கையில் வைத்துப் பதனம் செய்யவும்.

இதில் ஒரு சிட்டிகை எடுத்து மேல் தூவினால், தன்னை மறந்து கேட்டதை தருவார்கள். தன் நினைவு வர, தண்ணீரில் குளிப்பாட்ட சுய நினைவு வரும். இது மதி மயக்கப்பொடி என்று பெயர். இதனைச்செய்து தீய வழிகளில் பயன்படுத்தக்கூடாது. யானை, புலி, கரடி, சிங்கம், பசு, மனிதர் முதல் எல்லாம் மயங்கி நிற்கும்

சகல வசியம்

1. வெள்ளெருக்கன் வேர், 2. வெள்ளை விஷ்ணு காந்தி வேர்

3. வெள்ளை சாரணை, 4. வெண்குன்றிமணி

இவைகளை முறைப்படி காப்பு கட்டி, சாபம் போக்கி, ஆணிவேர் அறாமல் தோண்டி எடுத்து,உலர்த்தி தீயில் கறுக்கி பத்திரப்படுத்தவும்.

1. கருங்குருவி பிச்சுக் கண், 2. கரும்பூனை பிச்சுக் கண்

3. கருநாய் பிச்சுக் கண், 4. கரிச்சான் பிச்சுக் கண்

இவைகளை எடுத்து உலர்த்தி வைத்துக்கொண்டு பச்சைக் கற்பூரம், கோரோசனம், புனுகு,குங்குமப்பூ,கஸ்தூரிஇவைகளைவகைக்குஒருகுன்றிமணிஎடைஎடுத்துசேர்த்து, வல்லூறு தைலம் விட்டு இரண்டு ஜாமம் அரைத்து, கொம்புச் சிமிழில் பத்திரப்படுத்தவும்.

இதற்கு பூஜை மந்திரம்

ஓம் ஹ்ரீம்நமோபகவதிஉச்சிஸ்டசண்டாளினிசர்வலோகம்தஸமானயஸ்வாஹ.

இந்த மந்திரத்தை தினம் 1008 உருவு வீதம் 11 நாட்கள் ஜெபம் செய்ய வேண்டும்.

நிவேதனம்

பால், பழம், கற்கண்டு, தேங்காய், தேன், வடை, சூடம், பத்தி இவைகளை வைத்து தீப தூபம் காட்டி வணங்கி பூஜை செய்ய மை உயிர் பெறும்.

இதை வேண்டும் போது நெற்றியில் திலகம் வைத்துக் கொண்டு போக, யானை முதல் எறும்பு வரை உயிர் உள்ள பிராணிகள் அத்தனையும் வசியமாகும்.

போகமணி (பெண் வசியம்)

ஒரு முள்ளெலி ஒன்றைப் பிடித்து வந்து அதன் வாயினுள் ஒரு பலம் பாதரசத்தை விட்டு, வாயை தைத்து சீலை மண் செய்து புதைத்து வைத்து 40 நாட்கள் சென்ற பின் எடுத்துப் பிரித்தால், ரசம் கட்டி மணியாகும். அதை எடுத்து பூ நாகம் 5 பலம் அரைத்து, மணிக்குக் கவசம் செய்து, 10 எருவில் புடமிட்டு எடுத்தால் பிரகாசமுள்ள மணியாகும். இவ்விதம் 10 எருவில் புடமிட்டு எடுத்தால் பிரகாசமுள்ள மணியாகும். இவ்விதம் 10 புடம் போட்டு எடுத்து பத்திரப்படுத்தவும். இதை வாயில் அடக்கி வைத்துக் கொண்டு போகித்தால் விந்து விழாது; பெண்கள் நடுங்குவார். உன்னை விட்டு அரை க்ஷணமும் பிரியார்.

வித்வேசனம்

காக்கை கூண்டு ஒன்றைக் கலைக்காமல் எடுத்து வந்து நெருப்பில் போட்டு எரித்தால், எல்லாம் வெந்து ஒரு வேர் மட்டும் வேகாது. அதை எடுத்து பத்திரம் செய்ய வேண்டும். அதன் பின் சுடுகாட்டில் முளைத்து இருக்கும் எட்டி மரத்திற்கு காப்புகட்டி, சாப நிவர்த்தி செய்து, வடக்கே முள்ளம் பன்றி முள் ஒன்று, ஆக இந்த மூன்றையும் சேர்த்து, பெண்கள் விலக்கமான துணியில் சுற்றி எதிரியின் வீட்டில் சொறுகி வைத்தால் வித்வேசனம் என்பது, துவேசம் உண்டாக்குதல்) உடனே குடும்ப சண்டை ஆரம்பமாகும். ஒருத்தருடன் ஒருத்தர் கூடி வாழ விடாது. இதை எடுத்து எறிந்து விட்டால், சச்சரவு நீங்கி ஒன்று சேர்வர்.

கருங்குரங்கு மை(உச்சாடனம்)

இரண்டு வீசை சந்தனக் கட்டை வெட்டி துண்டுகளாக நறுக்கி வைத்துக் கொள்ளவும். ஒரு கருங்குரங்கு பிடித்து வந்து, குடல் போக்கி எடுத்து ஒரு மண் பானையில் ஒரு வீசை சந்தனக்கட்டை போட்டு அதன் மீது குரங்கை வைத்து, மேலும் ஒரு வீசை கட்டைகளைப் போட்டு மேல்மூடி, சீலைமண் செய்து குழித்தைலம் எடுத்து பதனம் செய்யவும்.

1. நத்தைச் சூரி வேர்
2. நாயுருவி வேர்
3. கொழிஞ்சி வேர்
4. பொன்னாங்கண்ணி வேர்
5. மருதோன்றி வேர்
6. வெண்புரசு வேர்
7. கொத்தான் வேர்

இவைகளை முறைப்படி காப்புக்கட்டி, சாபம் போக்கி ஆணிவேறாமல் தோண்டி எடுத்து உலர்த்தி தீயில் கறுக்கி எடுத்து கர்வத்திலிட்டு, கருங்குரங்கு தைலம் விட்டு இரண்டு ஜாமம் அரைத்து பச்சைக் கற்பூரம், கோரோசனம், புனுகு, குங்குமப்பூ, கஸ்தூரி இவைகளை வகைக்கு ஒரு குன்றிமணி வீதம் சேர்த்து,அரைத்து, கொம்புச் சிமிழில் பத்திரம் செய்யவும்.

இதற்கு பூஜை மந்திரம்

ஓம் ஹ்ரீம் உச்சிஸ்ட சாமுண்டீ சர்வ சங்கார காருணி ஹ்ராம் ஹ்ரீம் ஹ்ரூம் ஹூம் பட் ஸ்வாஹ.

இந்த மந்திரத்தை தினம் 1008 உருவு வீதம் 11 நாட்கள் ஜெபம் செய்ய வேண்டும்.

நிவேதனம்

பால், பழம், கற்கண்டு, தேங்காய், இளநீர், சுண்டல், சூடம், பத்தி இவைகளை வைத்து தூப தீபம் காட்டி வணங்கி ஜெபம் செய்ய வேண்டும். மை உயிர் பெறும். சகல உச்சாடனம் ஆகும்.

மிருக வசிய மை

தொட்டால் வாடி, விஷ்ணுகாந்தி வேர், முன்னை சங்கன் விரை, விஷங்கொட்டி, காடுகட்டி, நாயுருவி, ஏரழிஞ்சல் இவைகளைவ் சமனெடையாக எடுத்து தேனில் அரைத்துத் திலர்தமிட்டு சென்றால், மிருகங்கள் வசியமாகும்.

கரும்பூனை மை

சந்தனக் கட்டை துண்டுகளாக நறுக்கினது இரண்டு வீசை, கரும்பூனை ஆண், பெண் இரண்டு வீசை கரும்பூனை ஆண்,பெண் இரண்டு கொண்டு வந்து குடல் போக்கி, ஒரு வீசை சந்தனகட்டையை போட்டு மூடி, சீலைமண் செய்து குழித்தைலமெடுத்துப் பதனம் செய்யவும்.

1. பேய் தும்பை வேர், 2. பேய்மிரட்டி வேர், 3. தகரை வேர்

4. வேங்கை மரத்தின் வேர், 5. பேய்தேத்தான் வேர்

6. குமிழம் வேர், 7. பூனை வணங்கி வேர்

இவைகளை முறைப்படி காப்புக்கட்டி, சாபம் போக்கி ஆணிவேறாமல் தோண்டி எடுத்து உலர்த்தி தீயில் கறுக்கி எடுத்து கல்வத்தில் போட்டு, கரும்பூனை தைலம் விட்டு இரண்டு ஜாமம் அரைத்து பச்சைக் கற்பூரம், கோரோசனம், புனுகு, குங்குமப்பூ, கஸ்தூரி இவைகளை ஒரு குன்றிமணி வீதம் கூட்டி,அரைத்து, கொம்புச் சிமிழில் போட்டு பதனம் செய்யவும்.

இதற்கு பூஜை மந்திரம்

ஓம் மாயாரூபி ஹ்ரீம் சண்ட ப்ரசண்டி சாமுண்டி ஸர்வ சக்தி பைரவி மஹாமாய ஸர்வ ஸ்திரஸ்கரணம் குரு குரு ஸ்வாஹ.

இந்த மந்திரத்தை தினம் 1008 உருவு வீதம் 11 நாட்கள் ஜெபம் செய்ய வேண்டும்.

நிவேதனம்

பால், பழம், அப்பம், அதிரசம்,பொங்கல், சூடம், பத்தி இவைகளை வைத்து தூப தீபம் காட்டி வணங்கி ஜெபம் செய்ய. மை உயிர் பெறும். இதை நெற்றியில் திலகமிட, எவர் கண்களுக்கும் காணமாட்டார். இது மறைப்பு வித்தை.

தேவாங்கு மை

ஐந்து தேவாங்குகளைப் பிடித்து குடல் போக்கி வைத்துக்கொண்டு, இரண்டு வீசை சந்தனக் கட்டை துண்டு துண்டாக வெட்டி, ஒரு பானையில் பாதிக்கட்டைகளைப் போட்டு தேவாங்கை வைத்து மற்ற பாதிக்கட்டைகளையும் போட்டு மேல்மூடி, சீலைமண் செய்து, குழி வெட்டி குழியில் பானையை வைத்து எரு போட்டு குழித்தைலம் இறக்கி பதனம் செய்யவும்.

1. பேய்தேத்தான் வேர், 2. கருங்காலி வேர், 3. நத்தைச்சூரி வேர்

4. வெள்ளெருக்கன் வேர், 5. காக்கணம் வேர், 6. வெண்புரசு வேர்

இவைகளை முறைப்படி காப்புக்கட்டி, சாப நிவர்த்தி ஆணிவேறாமல் எடுத்து உலர்த்தி தீயில் கறுக்கி எடுத்து கல்வத்தில் போட்டு, தேவாங்கு தைலம் விட்டு இரண்டு ஜாமம் அரைத்து பச்சைக் கற்பூரம், கோரோசனம், புனுகு, குங்குமப்பூ, கஸ்தூரி இவைகளை குன்றிமணி சேர்த்து அரைத்து, கொம்புச் சிமிழில் பதனம் செய்யவும்.

பஞ்சபக்ஷி மை (சகல சித்தி)

1. சிவப்பு நிறமான கோழி 1
2. மயில் 1
3. சந்தனக்கட்டை வீசை 2
4. கருங்காக்கை 1
5. வல்லூறு 1
6. ஆந்தை 1

சந்தனக்கட்டையை வெட்டித்துண்டுகளாக நறுக்கி எடுத்துக் கொள்ளவும். பக்ஷிகளின் குடல், உரோமம் போக்கி, சுத்தம் செய்து ஒரு மண் பானையில் பாதி சந்தனக் கட்டைகளை அதன் மீது போட்டு. மண் சீலை செய்து, ஒரு குழித்தைலம் இறக்கி பதனம் செய்யவும்.

1. குப்பைமேனி வேர், 2. சிறுகீரை வேர், 3. நீலி வேர்,

4. அரைக்கீரை வேர், 5. தகரை வேர்

இவைகளை முறைப்படி காப்புக்கட்டி, சாபம் போக்கி ஆணிவேறாமல் தோண்டி எடுத்து உலர்த்தி தீயில் கறுக்கி எடுத்து கல்வத்தில் போட்டு, மேற்கண்ட தைலம் விட்டு இரண்டு ஜாமம் அரைத்து பச்சைக் கற்பூரம், கோரோசனம், புனுகு, குங்குமப்பூ, கஸ்தூரி இவைகளை வவைக்கு ஒரு குன்றிமணி வீதம் சேர்த்து அரைத்து, கொம்புச் சிமிழில் பத்திரம் செய்யவும்.

இதற்கு பூஜை மந்திரம்

ஓம் ஸ்ரீம் ஐம் க்லீம் ஸௌம் ஹ்ரீம் சிவயநம ஸர்வம் மமவசம் குரு குரு ஸ்வாஹ. இந்த மந்திரத்தை தினம் 1008 உருவு வீதம் 21 நாட்கள் ஜெபம் செய்ய, மை உயிர் பெறும்.

நிவேதனம்

பால், பழம், தேங்காய், வடை, சுண்டல், இளநீர், இவைகளை வைத்து தீபதூபம் காட்டி வணங்கி ஜெபம் செய்ய. சகல சித்தி கைகூடும்.

உருமாற்றம்

ஆதிவாரம் அஸ்த நட்சத்திரம் நாளில் காட்டுப்பூனையை கொன்று தலையை உடைத்துப்பார்த்தால், வெண்ணிறமான கல் ஒன்று இருக்கும். இது ஆணி முத்துவடிவில் பளபளப்புடன் இருக்கும். இதை எடுத்து பத்திரப்படுத்தவும். இதை வாயில் அடக்கிக் கொண்டால, இரவில் நம் உருவம் பூனையாக அடுத்தவர் கண்களுக்குத்தெரியும். எத்தனை கூட்டம் இருந்தாலும் அத்தனை பேருக்கும் பூனையாக தெரியும். இதை எடுத்து விட்டால், மனிதராக தோன்றும். இது ஒரு அதிசயமான சித்து என போற்றுவர்.

பஞ்சபூத மை

1. வல்லூறு கண்பிச்சு, 2. கோழி கண்பிச்சு, 3. காகம் கண்பிச்சு, 4. ஆந்தை கண்பிச்சு, 5. மயில் கண்பிச்சு

கோரோசனம், பச்சைக் கற்பூரம், புனுகு, ஜவ்வாது, கஸ்தூரி இவைகளையும் ஒன்று கூட்டி கல்வத்திலிட்டு,கேசரி தைலம் விட்டு இரண்டு ஜாமம் அரைத்து,கொம்புச் சிமிழில் பதனம் செய்யவும். இது மறைவு ஆகும் வித்தை, இதை கொஞ்சம் எடுத்து நெற்றியில் திலகமிட்டால், உருவம் பிறர் கண்ணுக்குத் தெரியாது.

பெண் வசிய மை

1. வெள்ளைக் குன்றிமணி
2. தொட்டால் வாடி
3. நீர் மேல் நெருப்பு
4. கீழக்காய் நெல்லி
5. தொட்டால் சுருங்கி
6. வெள்ளை சாரணை
7. நிழல் வணங்கி
8. நத்தைச்சூரி

இவைகளை முறைப்படி காப்புக்கட்டி, சாபம் போக்கி ஆணிவேறாமல் தோண்டி எடுத்து உலர்த்தி தீயில் கறுக்கி எடுத்து கொண்டு,

1. கோரோசனம் குன்றிமணி அளவு 1
2. பச்சைக் கற்பூரம், ,,,, ,,,,, ,,,,
3. புனுகு, ,,,, ,,,, ,,,,
4. குங்குமப்பூ, ,,,, ,,,, ,,,,
5. கஸ்தூரி ,,,,, ,,,, ,,,,

இவைகளைக் கல்வத்திலிட்டு, மேல்கண்ட வேர்களையும் சேர்த்து, தேவாங்கு தைலம் விட்டு இரண்டு ஜாமம் அரைத்து கொம்புச்சிமிழில் பத்திரப்படுத்தவும். மை உயிர் பெறும்.

இதற்கு பூஜை மந்திரம்

ஓம் க்லீம் காம தேவாய சர்வலோக வஜீசுறாய மமவசம் குரு குரு ஸ்வாஹ. இந்த மந்திரத்தை தினம் 1008 உருவு வீதம் 15 நாட்கள் ஜெபம் செய்ய வேண்டும்.

நிவேதனம்

பால், பழம், தேங்காய், சுண்டல், வடை, பாயாசம், சூடம், பத்தி இவைகளை வைத்து தூப தீபம் காட்டி வணங்கி ஜெபம் செய்ய சித்தியாகும். இதை நெற்றியில் திலகமிட்டு சென்றால் சகல ஜன வசியம் ஆகும். வியாபாரம், தொழில் லாபம் தரும்; செல்வம் பெருகும். பெண் வசியம் ஆகும்.

அஷ்டகர்ம மை

நத்தைச்சூரி செடிக்கு அமிர்தயோகம் கூடிய வெள்ளிக்கிழமை அன்று காப்பு கட்டி, பொங்கலிட்டு, காவு கொடுத்து, கொண்டு வந்து குழித்தைலமிறக்க வேண்டும். பிறகு சிவன் மூலிகை, சித்த யோகம் கூடிய செவ்வாய் கிழமையன்று காப்பு கட்டி, வேர் அறுபடாமல் பிடுங்கி குழித்தைலமிறக்க வேண்டும். இந்த இரு வகையான குழித்தைலங்களிலும் வகைக்கு ஒரு விராகன் எடை எடுத்தக் கொள்ள வேண்டும். ஊமையன் வாய்ச்சோறு, மரக்கொடி சீலை இவைகளை வகைக்கு ஒரு விராகன் எடையும்; சிறுத்தை விரை இரண்டு விராகன் எடையும் சேர்த்து அரைத்து, ஒரு புதுச்சட்டியில் தடவிஆலாத்திப் பூரத்தை கொளுத்தி, புகை பிடித்து மை செய்து, ஒரு சிமிழில் பத்திரப்படுத்திக் கொள்ள வேண்டும். தேவையான போது வராகி மந்திரத்தை தினமும் பதினாயிரம் முறை செபித்து வைத்துக்கொண்டால். அஷ்டகர்மங்களும் கையாடலாம்.

பகைவர்கள் வசிய மை

வெள்ளைச்சார் வேளை வேரை, அவுரிச்சாற்றினால் அரைத்து புருவத்தின் மத்தியில் திலர்தமிட்டுக் கொண்டு சென்றால், பகைவர்கள் வசியமாவார்கள்.

ஜெகஜால மை

கருநாய் நாக்கு, பச்சோந்தி கால், கரும்பூனைப் பிச்சு, தேவாங்கு கண், இரட்டரணை வால் இந்த ஐந்தையும் ஓரழிஞ்சி குழித்தைலத்தால் அரைத்து, தங்கச் சிமிழில் வைத்து, சிவந்த நிறமுள்ள பட்டுத்துணியால் சுற்றிப் பத்திரமாய் வைத்துக் கொள்ளவும். ஜாலம் செய்ய விரும்பும்போது அந்த மையில் கொஞ்சம் தடவிக் கொண்ட செய்தால், பார்ப்பதற்கு மிகவும் வினோதமாக இருக்கும்.

சத்துரு வசியம்

1. வெள்ளை விஷ்ணுகாந்தி வேர்
2. கையாந்தகரை வேர்
3. வெண் கொழிஞ்சி வேர்
4. வெண்புரசு வேர்

இவைகளை முறைப்படி காப்புக்கட்டி, சாபம் நிவர்த்தி செய்து ஆணிவேறாமல் தோண்டி எடுத்து உலர்த்தி தீயில் கறுக்கி, பச்சைக் கற்பூரம், கோரோசனம், புனுகு, குங்குமப்பூ, கஸ்தூரி இவைகளை வகைக்கு ஒரு குன்றிமணி வீதம் எடுத்து, மேற்கண்ட வேர்களுடன் சேர்த்து கல்வத்திலிட்டு ஒரளிஞ்சி தைலம் விட்டு இரண்டு ஜாமம் அரைத்துகொம்புச் சிமிழில் போட்டு பதனம் செய்யவும்.இதை நெற்றியில் திலகமிட்டுச் சென்றால் சத்துரு வசியம், ராஜ வசியம் ஆகும். பெரிய அதிகாரிகளைப் பார்க்க இதை வைத்துக் கொண்டு போகலாம். நல்ல கௌவரம் பெற்று காரிய சித்தியுடன் வரலாம். இன்னும் எதிரிகள் சம்பந்தமான எல்லாக் காரியத்திற்கும் ஆகும்.

மோகினி மந்திரம்

ஓம் நமோ பஹவதி பாலமோகினி மமசத்ரு வஸம் குரு குரு ஸ்வாஹ. இந்த மந்திரத்தை தினம் 1008 உருவு வீதம் 7 நாட்கள் ஜெபம் செய்ய வேண்டும்.

நிவேதனம்

மல்லிகை புஷ்பம், பால், பழம், அப்பம், அதிரசம், தேங்காய், சூடம், பத்தி இவைகளை வைத்து தூப தீபம் காட்டி வணங்கி ஜெபம் செய்ய வேண்டும்.

சர்ப்ப வசிய மை

1. ஆடு திண்டாப்பாளை வேர்
2. நாகமல்லி வேர்
3. சிறுசின்றி வேர்
4. சுரை வேர்
5. ஆதொண்டை வேர்
6. சிறிய நங்கை வேர்
7. நாகதாளி வேர்
8. தும்பை வேர்

இவைகளை முறைப்படி காப்புக்கட்டி, சாபம் நிவர்த்தி செய்து ஆணிவேறாமல் தோண்டி எடுத்து உலர்த்தி தீயில் கறுக்கி எடுத்துக் கொண்டு, பச்சைக் கற்பூரம், கோரோசனம், புனுகு, குங்குமப்பூ, கஸ்தூரி இவைகளை வகைக்கு ஒரு குன்றிமணி வீதம் சேர்த்து, ஓரளிஞ்சி தைலம் விட்டு இரண்டு ஜாமம் அரைத்துகொம்புச் சிமிழில் வைத்து பத்திரப்படுத்தவும்.

இதற்கு பூஜை மந்திரம்

ஓம் நமோ பஹவதி அனந்த ரூபி அனந்த குமாரி நாகலோக வாசினி க் லி ம் ஸெ ள ம் ஸ்ரீ ம் ஓ ம் கு ரு கு ரு ஸ் வ ா ஹ . இந்த மந்திரத்தை தினம் 1008 உருவு வீதம் 12 நாட்கள் ஜெபம் செய்ய வேண்டும்.

நிவேதனம்

பால், பழம், முட்டை, தேங்காய், சூடம், பத்தி இவைகளை வைத்து தூப தீபம் காட்டி வணங்கி ஜெபம் செய்ய, மை உயிர் பெறும்.

இதை வேண்டும் போது கொஞ்சம் கையில் வைத்துக்கொண்டு சர்ப்பங்களை பிடிக்கலாம். கடிக்காது, நம் இஷ்டம் போல் ஆடி விளையாடும், சர்ப்பம் தீண்டினவர்களுக்கு கொஞ்சம் நெற்றியில் தடவினால், விஷம் நீங்கி சுகப்படுவார்.

சகல சித்தி மை

தேவாங்கு கண், வல்லூறு கண், சேம்போத்து கண், கருங்குருவி கண், ஆந்தைக் கண், கருங்குருவிப்பிச்சு இவைகளை எல்லாம் வெய்யலில் உலர்த்தி ஒரு சட்டியில் போட்டுக் கருக்கி, அதை கல்வத்தில் போட்டு அத்துடன் பச்சைக் கற்பூரம், கஸ்தூரி, புனுகு, குங்குமப்பூ, கோரோசனை இவைகளைச் சம எடையாகப் போட்டுக் கலந்து, ஐங்கோலத் தைலத்தால் அரைத்து, அதை ஒரு சிமிழில் அடைத்துக்கொண்டு, சிம் நம் வம் டு டு டு டா டா டா என்று ஒரு லட்சம் தடவைகள் செபித்து, மையை நெற்றியில் இட்டுக் கொண்டு சென்றால், எல்லாவித காரியங்களும் சித்தியாகும்.

மிருக உச்சாடனம்

1. காட்டு ஆமணக்கு வேர்
2. செந்தும்பை வேர்
3. வெள்ளைக் கண்டங்கத்திரி வேர்
4. வெண்தோன்றி வேர்
5. வெள்ளை நீர் முள்ளி வேர்
6. நெம்பை வேர்
7. சிறியநங்கை வேர்

இவைகளை முறைப்படி காப்புக்கட்டி, சாபம் போக்கி ஆணிவேறாமல் தோண்டி எடுத்து உலர்த்தி தீயில் கறுக்கி எடுத்துக் கொண்டு, பச்சைக் கற்பூரம், கோரோசனம், புனுகு, குங்குமப்பூ, கஸ்தூரி இவைகளை வகைக்கு ஒரு குன்றிமணி வீதம் சேர்த்து,கல்வத்திலிட்டு கருங்குரங்கு தைலம் விட்டு அரைக்க வேண்டும். இரண்டு ஜாமம் அரைத்து எடுத்து கொம்புச் சிமிழில் வைத்து பத்திரம் செய்யவும்.

இதற்கு பூஜை மந்திரம்

ஓம் ஹ்ரிம்ஹ்ரீம் பால மோகினி சர்வம் உச்சாட உச்சாட பட் ஓம் கிரக ரூபினி ஹூம் ப ட் ஸ் வ ா ஹ .

இந்த மந்திரத்தை தினம் 1008 உருவு வீதம் 10 நாட்கள் ஜெபம் செய்ய, சித்தியாகும்

நிவேதனம்

பால், பழம், சுண்டல்,அப்பம்,கற்கண்டு, தேங்காய், சூடம், பத்தி இவைகளை வைத்து தூப தீபம் காட்டி வணங்கி ஜெபம் செய்ய, மை உயிர் பெறும்.

இதை வேண்டும் போது கொஞ்சம் கையில் எடுத்து விபூதியில் கலந்து மிருகத்தின் மேல் தூவ, அது உச்சாடித்து ஆடும். தண்ணீர் தெளித்தால் நிற்கும்.

சர்ப்ப உச்சாடனம்

1. நாகலிங்கம் வேர்
2. சிறுசின்றி வேர்
3. நாதாளி வேர்
4. சுரை வேர்
5. நீலி வேர்
6. குப்பைமேனி வேர்
7. நாகமல்லி வேர்
8. சிறியநங்கை வேர்
9. தும்பை வேர்

இவைகளை முறைப்படி காப்புக்கட்டி, சாபம் போக்கி ஆணிவேறாமல் தோண்டி எடுத்து, உலர்த்தி தீயில் கறுக்கி எடுத்து வைத்துக்கொண்டு, பச்சைக் கற்பூரம், கோரோசனம், புனுகு, கஸ்தூரி இவைகளை வகைக்கு ஒரு குன்றிமணி வீதம் சேர்த்து,கல்வத்திலிட்டு கருங்குரங்கு தைலம் விட்டு அரைக்க வேண்டும். இரண்டு ஜாமம் அரைத்து எடுத்து கொம்புச் சிமிழில் வைத்து பத்திரம் செய்யவும்.

இதற்கு பூஜை மந்திரம்

ஓம் நாக நாதாய ஸர்வ விஷம் நாஷாய நாஷய க்லீம் ஹ்ரீம் ஓம் ஹூம் பட் ஸ்வாஹா .இந்த மந்திரத்தை தினம் 1008 உருவு வீதம் 10 நாட்கள் ஜெபம் செய்ய, சித்தியாகும்

நிவேதனம்

பால், பழம், சுண்டல், முட்டை, வடை, பாயாசம், தேங்காய், சூடம், பத்தி இவைகளை வைத்து தூப தீபம் காட்டி வணங்கி ஜெபம் செய்ய, மை உயிர் பெறும்.

பாம்புகளை அழைத்து ஆடவிட்டு வேடிக்கைச்செய்யலாம். இந்த மையைக் கண்டவுடன் பறக்கும்.

பேதான மை

1. சிற்றகத்தி வேர்
2. சிற்றாமணக்கு வேர்
3. சிறுகுறிஞ்சான் வேர்
4. சிறுமுன்னை வேர்
5. சிறுசின்னி வேர்
6. சிறுகுமிழம் வேர்
7. சிறியநங்கை வேர்

இவைகளை முறைப்படி காப்புக்கட்டி, சாப நிவர்த்தி செய்து, ஆணிவேறாமல் தோண்டி எடுத்து, உலர்த்தி தீயில் கறுக்கி எடுத்து வைத்துக்கொண்டு, கருநாய் ஒன்றை பிடித்து குடல் போக்கி குழித்தைலம் எடுத்துக்கொண்டு, பச்சைக் கற்பூரம், கோரோசனம், புனுகு, கஸ்தூரி, குங்குமப்பூ இவைகளை வகைக்கு ஒரு குன்றிமணி வீதம் சேர்த்து,கல்வத்திலிட்டு கருநாய் தைலம் விட்டு இரண்டு ஜாமம் அரைத்து எடுத்து கொம்புச் சிமிழில் வைத்து பத்திரம் செய்யவும்.

இதற்கு பூஜை மந்திரம்

ஓம் ஓம் ஹ்ரீம் க்லீம் ஜெய ஜெய நாராயணி ஸர்வ ஸ்வரூபி மமவசம் குரு குரு ஸ்வாஹா.

இந்த மந்திரத்தை தினம் 1008 உருவு வீதம் 10 நாட்கள் ஜெபம் செய்ய, சித்தியாகும்

நிவேதனம்

பால், பழம், சுண்டல், வடை, தேங்காய், சூடம், பத்தி இவைகளை வைத்து தூப தீபம் காட்டி வணங்கி ஜெபம் செய்ய, மை உயிர் பெறும்.

இதை கொஞ்சம் எடுத்து விபூதியில் கலந்து யார் மேல் தூவினாலும், மனம் பேதலித்து பைத்தியம் உண்டாகும். தண்ணீரை தலையுடன் விட்டுக் குளிப்பாட்டினால்,தெளிந்து விடும்.

தம்பன மை

1. கட்டுக்கொடி வேர்
2. தாமரைக் கிழங்கு வேர்
3. கருவீளி வேர்
4. செந்நாயுருவி வேர்
5. செங்கொடி வேலி வேர்
6. நீர்மேல் நெருப்பு வேர்
7. கருங்குன்றி வேர்
8. கரு ஊமத்தை வேர்
9. கரிசாலை வேர்

இவைகளை முறைப்படி காப்புக்கட்டி, சாப நிவர்த்தி செய்து, ஆணிவேறாமல் தோண்டி எடுத்து, உலர்த்தி தீயில் கறுக்கி எடுத்துக்கொண்டு, பச்சைக் கற்பூரம், கோரோசனம், புனுகு, கஸ்தூரி, குங்குமப்பூ இவைகளை வகைக்கு ஒரு குன்றிமணி வீதம் சேர்த்து,ஒரளிஞ்சி தைலம் விட்டு அரைத்து, இரண்டு ஜாமம் ஆனபின் எடுத்து கொம்புச் சிமிழில் பத்திரம் செய்யவும்.

இதற்கு பூஜை மந்திரம்

ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் ஹ்ராம் ணம் ணம் தம்பய தம்பய ஆனந்த ரூபி அமிர்தவல்லி ஆம் ஓம் பட் ஸ்வாஹா.

இந்த மந்திரத்தை தினம் 1008 உருவு வீதம் 8 நாட்கள் ஜெபம் செய்ய,வேண்டும்

நிவேதனம்

பால், பழம், கற்கண்டு, அடை,தேன், தேங்காய், சூடம், பத்தி இவைகளை வைத்து தூப தீபம் காட்டி பூஜை செய்தால் மை உயிர் பெறும்.

இதை கொஞ்சம் எடுத்து விபூதியில் கலந்து யார் மேல் தூவினாலும், ஸ்தம்பித்து நின்று விடுவார். தண்ணீரை தலையுடன் விட்டுக் குளிப்பாட்ட தெளியும்

இந்த மையை உடலில் பூசிக்கொண்டு நெருப்பில் நடக்கலாம் ; நெருப்பு சுடாது. இது அக்கினி தம்பனம்.

இந்த மையை இடுப்பில் தடவிக் கொண்டு தண்ணீரில் நடக்கலாம். எவ்வளவு தண்ணீர் இருந்தாலும் இடுப்புக்கு மேல் வராது. இது ஜல தம்பனம் ஆகும்.

கொஞ்சம் மையை எடுத்து விபூதியில் கலந்து மிருகங்களின் மேல் தூவினால், அது அப்படியே நின்று விடும்; ஓடாது. பின் தண்ணீரை விட்டுக் குளிப்பாட்ட, அது தெளிந்து செல்லும். அது மிருக தம்பனம் ஆகும்.

கொஞ்சம் மை எடுத்து பேய் ஆடும் போது அவர் மேல் தூவினால், அது ஆடாமல், வாய் திறவாமல் அப்படியே நின்று விடும். பின்னர் தண்ணீரில் குளித்து உட்கார வைத்து ஒட்டினால், பேர் சொல்லி முடி எடுத்துக் கொடுக்கும்.

கொஞ்சம் மை எடுத்து பீஜத்தில் லேபனம் செய்து புணர, விந்து விழாது. இது விந்து தம்பனம் ஆகும்.

கொஞ்சம் மை எடுத்து வண்ணன் வெள்ளாவியில் தடவினால், வெள்ளாவி வேகாது.

கொஞ்சம் மை எடுத்து விபூதியில் கலந்து கொல்லன் உலையில் போட்டால், துருத்தியில் காற்று வராது.

எல்லாவிதமான தம்பன வேலைகளுக்கும் இது உதவும். தாவரம் முதல் யானை புலி வரை ஸ்தம்பித்து நிற்கும். எல்லாவற்றையும் விடுவிக்க, தண்ணீரைத் தெளித்தால் விடுபட்டு போகும். எந்த ஜீவனுக்கும் தீங்கு செய்யாமல் நல்லதை செய்து நன்மை அடையலாம்.

வித்வேசன மை

1. மருவூமத்தன்
2. நிலக்கடம்பு
3. எட்டி வேம்பு
4. நாகமல்லி

இவைகளை காப்புக்கட்டி, சாபம் போக்கி, வேர் எடுத்து, உலர்த்தி தீயில் கறுக்கி எடுத்து வைத்துக் கொண்டு, பன்றி மலம், நாய் மலம் இவைகளை எடுத்து குழித்தைலம் இறக்கி, மேற்கண்ட வேர்களைக் கல்வத்திலிட்டு, தைலத்தால் நான்கு ஜாமம் அரைத்து எடுத்து பத்திரப்படுத்தவும்.இந்த மையை ஒரு துணியில் வைத்து எதிரி வீட்டில் சொருக, வித்வேசனமாகும்

கண்கட்டு மை

1. தேவாங்கு பிச்சு கண்
2. கருங்கோழி பிச்சு கண்
3. கருங்குரவி பிச்சு கண்
4. கரும்பூனை பிச்சு கண்
5. பச்சோந்தி பிச்சு கண்
6. கருங்காக்கை பிச்சு கண்
7. கருங்குரங்கு பிச்சு கண்

1. பேய்தேத்தான் வேர்
2. நத்தைச்சூரி வேர்
3. உரோம வேங்கை வேர்
4. திகைபூண்டு வேர்

இவைகளின் வேர்களை மட்டும் தீயில் கறுக்கி எடுத்து கல்வத்திலிட்டு, மேற்கண்ட பிச்சு கண் இவைகளை கூட்டி, கேசரி தைலம் விட்டு இரண்டு ஜாமம் அரைத்து, பச்சைக் கற்பூரம், கோரோசனம், புனுகு, கஸ்தூரி, ஜவ்வாது இவைகளை ஒரு குன்றிமணி எடை பிராமணம் சேர்த்து அரைத்துக் கொம்புச் சிமிழில் பதனம் செய்யவும்.

இதற்கு பூஜை மந்திரம்

ஓம் ஹ்ரீம் மஹாமயே மனோமயே ஸகல ஸ்தாவர ஜங்கமமுகம் மமவசம் ஆகர்ஸய ஹ்ரீம் ஓம் ஸ்வாஹ.

இந்த மந்திரத்தை தினம் 1008 உருவு வீதம் 21 நாட்கள் ஜெபம் செய்ய,வேண்டும்

நிவேதனம்

பால், பழம், அப்பம், தேங்காய், சூடம், பத்தி இவைகளை வைத்து தூப தீபம் காட்டி வணங்கி பூஜை செய்தால் மை உயிர் பெறும்.தண்ணீர் இருந்தாலும் இடுப்புக்கு மேல் வராது. இது ஜல தம்பனம் ஆகும்.

இதனால் மாயாஜால வித்தைகள் செய்யலாம், மூடி வைக்கலாம். புலித்தோல், மான் தோல், பசத்தோல், இவைகளை ஒரு சபையில் கொண்டு வந்து போட்டு இதை உயிர் உண்டாக்குகிறேன் என்ற சொல்லி கொஞ்சம் மையை எடுத்து விபூதியில் கலந்து அதன் மீது தூவி விட்டால், எல்லாம் உயிர்ப்பிராணிகளாகத் தெரியும். அலைந்து, திரிந்து ஒடி குதிப்பது போல் அவர் கண்களுக்கு தெரியும். ஆனால், சிறிது நேரத்தில் எடுத்து விட வேண்டும் என்பதை ஞாபகம் வைக்கவும்.

வேப்பிலை கொஞ்சம் உருவி, மை தடவி கீழே போட்டால் , அது தேள்களாக தெரியும். புளியந்தழை கொஞ்சம் எடுத்து மை தடவி கீழே போட்டால், எல்லாம் செங்குழவியாக தெரியும். கயிறு ஒன்றை எடுத்து கொஞ்சம் மை தடவி போட்டால், பாம்பாக ஓடும். இப்படி ஆயிரக்கணக்கான வேடிக்கை காட்டலாம். இதற்கு மாயா மந்திரத்தை ஜெபம் செய்து சித்தியடைய வேண்டும். மந்திர சித்தி இல்லையேல் ஒன்றும் ஆகாது. முறைப்படி ஜெபம் செய்து மந்திர சித்தி ஆனபின் தொழில் செய்ய வேண்டும்.

பாதாள அஞ்சனம்

சாதிக்காய், தும்பை, மஞ்சள், துளசி வித்து, பொற்றலைக் கையான், தேற்றான் விரை, பசுவின் கண் இவைகளை ஆமணக்கெண்ணையில் அரைத்து, மை செய்து திலர்தமிட்டுக் கொள்ள, பாதாளத்தில் உள்ள பொருள்கள் எல்லாம் தெரியும்.